தமிழ்நாடு அரசு

# மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

**சென்னை – 600 028**

## அலுவலக உதவியாளர் பணிக்கான விளம்பர அறிவிக்கை

**க.எண்:537/அ2/2025** **நாள்: 06.02.2026**

**(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கடித எண்.2926/TD2/2025–1, நாள்.10.09.2025–இன்படி வெளியிடப்படுகிறது )**

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, சென்னை–28–ல் ஆதிதிராவிடருக்கான குறைவு பணியிடம் (SC Shortfall Vacancy) 1 (ஒன்று) மட்டும் நேரடி நியமனம் மூலம் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்திட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணியிடம் தொடர்பான விவரம் பின்வருமாறு,

| வ. எண் | காலிப் பணியிடங்கள் | ஒதுக்கீடு விபரம் | தகுதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | ஆதிதிராவிடர் (SC ) | 1 | வயது 01.07.2025 அன்று | SC | 18 முதல் 37 வரை |
| | | | 2 | கல்வித் தகுதி | | 8ம் வகுப்பு தேர்ச்சி |
| | | | 3 | ஊதிய விகிதம் | | ரூ.15700–58100 (Level:1) |
| | | | 4 | பிற தகுதிகள் | | தமிழ் எழுத படிக்க கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். |

### நிபந்தனைகள்

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி, இருப்பிட முகவரி மற்றும் பணி அனுபவம் போன்ற சுயவிபரங்களைக் குறிப்பிட்டும் புகைப்படம், இருப்பிடச்சான்றிதழ்,சாதிச்சான்றிதழ் மற்றும் இரண்டு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ / படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்கண்ட முகவரிக்கு நேரிலோ தபால் மூலமாகவோ 23.02.2026 பி.ப 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெரும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

**இயக்குநர் , மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை,**

3ம் தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம்,எம்.ஆர்.சி நகர்,சென்னை – 600 028 அலுவலக தொலைபேசி எண்.044–25340442.

செமதொஇ/158/வரைகலை/2026